**பரமக்குடி நகராட்சி அலுவலகம்,**
**நாள். 22.08.2022**

**அன்புடையீர்,**

பரமக்குடி நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நிகழும் திருவள்ளுவராண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி (25.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண். 123 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண். 124 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண். 125, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண். 126, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு இந்நகர் 36 வார்டு பகுதிகளில் டெங்கு தடுப்பு பணிகளை தீவிரப்படுத்தும் பொருட்டு 300 வீடுகளுக்கு 1 டெங்கு மஸ்தூர் 1 பணியாளர்கள் நியமித்து டெங்கு தடுப்பு பணிகளை தீவிரபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் 2571/2017/ஐ1 நாள்.27.11.2017 மற்றும் துணை இயக்குநர் பொதுசுகாதாரப்பணிகள் அவர்களின் கடிதம் ந.க.எண்.4414/அ4/2016 நாள்.13.03.2022 –ன்படியும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிர்ணயம் அடிப்படையில் மஸ்தூர் பணியாளர்களுக்கு EPF, ESI தொகையினை சேர்த்து தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெற்று டெங்கு தடுப்பு பணியாளர்களை நியமித்து சுமார் 3000 குடியிருப்பு பகுதிகளில் டெங்கு பணிகளை தீவிரப்படுத்த இந்நகராட்சியில் தற்பொழுது 28.02.2022 உடன் தனியார் ஒப்பந்தம் முடிவடைகிறது. வரும் காலங்கள் பருவமழை காலங்களாக இருப்பதால் டெங்கு ஒழிப்பு பணி அவசர அவசியம் கருதி நகராட்சி நிதி நிலைமைய கருத்தில் கொண்டு 50 டெங்கு மஸ்தூர்களை நியமனம் செய்து பணி |

<table>
<tr><td></td><td>மேற்கொள்ள 6 மாதங்களுக்கு ஆகும் உத்சே செலவினம் ரூ.4761472/– இத்தொகையினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி டெங்கு ஒழிப்பு பணியினை தீவிரப்படுத்தும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>தீர்மானம் எண். 127, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.6</td><td>இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள், மற்றும் சுகாதார அலுவலரின் அறிக்கையின்படி பொதுசுகாதார பணியாளர்கள், பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்களுக்கு 2022–2023–ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலனிள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது.
<table>
<tr><td>I</td><td>பொதுசுகாதாரப்பிரிவு</td><td>எண்ணிக்கை</td></tr>
<tr><td>1</td><td>ஆண் துப்புரவு பணியாளர்கள்</td><td>43</td></tr>
<tr><td>2</td><td>பெண் துப்புரவு பணியாளர்</td><td>18</td></tr>
<tr><td>3</td><td>துப்புரவு பணி மேற்பார்வையாளர்</td><td>7</td></tr>
<tr><td>4</td><td>பொதுசுகாதார ஓட்டுநர்கள்</td><td>6</td></tr>
<tr><td>5</td><td>பொதுசுகாதார துலக்குநர்கள்</td><td>1</td></tr>
<tr><td>II</td><td>பொதுப்பிரிவு</td><td>எண்ணிக்கை</td></tr>
<tr><td>1</td><td>அலுவலகப் உதவியாளர்கள்</td><td>5</td></tr>
<tr><td>2</td><td>காவலர்கள்</td><td>6</td></tr>
<tr><td>III</td><td>பொறியியல் பிரிவு</td><td>எண்ணிக்கை</td></tr>
<tr><td>1</td><td>அலுவலகப் பணியாளர்கள், மின்கம்பி பணியாளர்கள், குடிநீர் பணியாளர்கள்</td><td>12</td></tr>
<tr><td>2</td><td>ஓட்டுநர்கள்</td><td>3</td></tr>
</table>
மேற்கண்ட பணியாளர்களில் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், பெண் துப்புரவுப் பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சேலை, ஜாக்கெட்டுகள், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்களுக்கு இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டர் பேண்ட் சட்டைகள், குடிநீர் பிரிவு, மின்பிரிவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி காக்கி பாலிஸ்டர் சட்டைகள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், துலக்குநர் களப்பணி உதவியாளர் போன்றவர்களுக்கு இரண்டு காக்கி பாலிஸ்டர் பேண்ட் மற்றும் இரண்டு ஜோடி வெள்ளை பாலிஸ்டர் சட்டைகள் மற்றும் அவைகளுக்குண்டான தையல்கூலி மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகளும், ஓட்டுநர்களுக்கு தோல் ஷீக்களும் ரூ.3.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் அரசு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷீக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>ந.க.எண்1448/2021/எச்2<br>அலுவலககுறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.சீருடைகளை ரூ.3.50 லட்சம் உத்தேச செலவினத்திற்குள் அரசு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், காலணிகள் மற்றும் தோல் ஷீக்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண். 128, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.7</td><td>பரமக்குடி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN.65AZ1094 (டிராக்டர்)க்கு 2022ம் (15.06.2022)–யுடன் தகுதிசான்று முடிவடைகிறது. வாகன தகுதி சான்று பெறுவதன் பொருட்டு பழுதுப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பழுதுப்பணிகள்ள மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.120000/–யை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
</table>

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொது சுகாதார அவசர அஅவசியம் கருதி பழுதுப்பணிகள் மேற்கொண்டு தகுதி சான்று பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.129 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.8

பரமக்குடி நகராட்சி பொதுசுகாதாரம் 2022–23ம் ஆண்டுக்கான பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சுழலை உறுதி செய்யும் பொருட்டு பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப்பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (Cleanliness drive) நடத்தப்பட வேண்டும் என்றும், இம்முகாம்களில் தன்னார்வ அமைப்புகள், குடியிருப்போர் நலச்சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு பெருமளவில் இருக்க வேண்டும் என்றும், மேற்படி தூய்மைக்கான மக்கள் இயக்கத்தை (People’s Movement for Clean Cities) செயல்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மாதம் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப்பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த 2023 வரையிலான சுழற்சி கால அட்டவணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளுக்கு தேவையான பதாகைகள், விழிப்புணர்வு நிகழ்வுகளுக்குத் தேவையான பொருட்கள் தேநீர் உள்ளீட்ட அனைத்து செலவினங்களையும் ரூ.300000/–க்குள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 130, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.9

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் செயல்பட்டு வரும் TN65F3157 JCB டோசர் வாகனத்திற்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.2.15 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.17 நாள் 31.03.2022ன்படி அனுமதி அளித்ததன் பேரில் 22.04.2022ம் தேதி அன்று கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

| வ.எண் | வாகன எண் மற்றும் வகை | வரப்பெற்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை | |
|---|---|---|---|
| | | கணேஷ் JCB வெல்டிங் ஒர்க்ஸ் மற்றும் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் | கே.குமார் JCB லேத் ஒர்க் மற்றும் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் |
| 1 | TN65F3157 | RS.212343 | RS.214343 |

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கணேஷ் JCB வெல்டிங் ஒர்க்ஸ் மற்றும் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்
2. ரூ.212343 உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 131, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr><td>பொருள்.10</td><td>
இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் செயல்பட்டு வரும் TN65AY3865 வாகனத்திற்கு வருடாந்திர தகுதிச்சான்று பெறுவதற்கு தேவையான பழுதுப்பணிகள் மற்றும் புதிய டிரைலர் செய்தல் போன்ற பணிகளுக்காக ரூ.2.30 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.16 நாள் 31.03.2022ன்படி அனுமதி அளித்ததன் பேரில் 22.04.2022ம் தேதி அன்று கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கப்பட்டது.
<table>
<tr><td rowspan="2">வ.எண்</td><td rowspan="2">வாகன எண் மற்றும் வகை</td><td colspan="2">வரப்பெற்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை</td></tr>
<tr><td>BABU AUTOMOBILS AND ENGINEERING WORKS</td><td>SRI DEEPA ENTERPRISES</td></tr>
<tr><td>1</td><td>TN65AY3865</td><td>RS.229600</td><td>RS.237300</td></tr>
</table>
வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. ரூ.229600 உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண். 132, <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>
</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>
இந்நகராட்சிக்கு வரும் உள்ளூர் வெளியூர் தபால்கள் தகவல் உரிமைச்சட்ட தபால்கள் அரசு அலுவலக தபால்கள் அதிகமாக வருவதால் தற்போது மாதம் 2000/– ரூபாய்க்கு தபால்வில்லைகள் வாங்குவது குறைவாக உள்ளதால் வரும் காலங்களில் அதிக தபால்கள் பதிவுத்தபால்கள் அனுப்ப வேண்டியுள்ளதால் அதிக தொகை ரூ.5000/– (ஐந்தாயிரம்) வாங்க அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண். 133, <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>
</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>
பரமக்குடி நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்ட மன்ற அறிவிப்புகள் 2022–2023ன்படி ஒரு லட்சத்திற்கு கூடுதலான மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு அதி நவின வசதிகளுடன் கூடிய நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.188/– லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்.883 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 17.06.2022 நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி வார்டு– H பிளாக்–35, நகரளவு எண். 232,233,234, 235 மற்றும் 237/1–ல் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் சுமார் 1115 ச.மீ இடத்தை அறிவு சார்மையம் மற்றும் நூலகம் அமைக்க நகராட்சிக்கு நில முன் நுழைவு அனுமதி வழங்க கோரி மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u>–<br>
இந்நகர்மன்ற தீர்மான எண்.71 நாள் 31.05.2022ல் அனுமதிக்கப்பட்ட<br>
ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு பதிலாக மேற்கண்ட<br>
இடத்தை தேர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.638/2022/எப்2)<br>
தீர்மானம் எண். 134, <u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>
</td></tr>
</table>

| | |
|---|---|
| பொருள்.13 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் வறட்சி நிவாரண மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு எதிரில் உள்ள வைகை ஆற்று பகுதியிலிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நீரேற்றம் செய்ய பயன்பட்டு வரும் 6 ஏசி பைப் உடைப்பு ஏற்பட்டு நீரேற்றம் செய்யப்பட்டு வரும் குடிநீர் அனைத்தும் காட்டுப்பரமக்குடி நீர்த்தேக்க தொட்டி எதிரிலும் முத்தையாகோவில் அருகிலும் தேசிய நெடுஞ்சாலையில் வெளியேறுகிறது, இதனால் அப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய சாலையை தோண்டி சரி செய்ய அனுமதி கோரி கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை இராமநாதபுரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் மேற்கண்ட பணியை செய்ய சாலை அபிவிருத்தி கட்டணமாக ரூ.23000/– செலுத்தக்கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது.( கடிதம் எண்.ந.க.எண்.1110/2022/JDO–1 நாள் 29.06.2022) அதன்படி ரூ.23000/–ஐ கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு இராமநாதபுரம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 135, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.14 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனம் 16 பணியாளர்களை கொண்டு 01.03.2019 முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு உத்தரவு காலம் 28.02.2021ம் தேதியுடன் முடிவடைவதாகவும், மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையில், மேற்கண்ட நிறுவனம் எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் பள்ளிகளில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வந்ததால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் பள்ளிகளில் தூய்மைப்பணிகள் வருடம் முழுவதும் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாலும், மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யலாம் என்ற அடிப்படையில், பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்போது பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொண்டு வரும் M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.1347 நாள்.11.02.2021 இல், அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1560, நாள்.25.01.2022ன்படி, மேலும் 01.03.2022 முதல் 30.04.2022 வரை இரண்டு மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.65 நாள் 31.05.2022ன்படி முன் அனுமதி பெற்று மேலும் 01.05.2022 முதல் 30.06.2022 வரை இரண்டு மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>தற்சமயம், மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் 30.06.2022 அன்றுடன் முடிவடைவதால், அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளின் பொதுசுகாதார அவசியத்தினை கருதியும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணபத்தின்படியும், 01.07.2022 முதல் 31.08.2022 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே ஊதிய விகிதத்தில் 01.07.2022 முதல் 31.08.2022 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை கல்வி நிதி மற்றும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண். 136, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| பொருள்.15 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் உழவர் சந்தை நுண்ம உரக்கூட மையத்தில் 5 பணியாளர்களைக் கொண்டு உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1154 நாள் 26.02.2020ன் படி, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 28.02.2021 வரை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நுண்ம உரக்கூட பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி உரம் தாயாரிக்கும் பணிகள் நடைபெற்றதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1351 நாள். 11.02.2021–இன்படி, 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 5 பணியாளர்களை பணி அமர்த்திட Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1561, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை இரண்டு மாத காலங்களுக்கு பணி அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.61 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.07.2022ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் வாரச்சந்தை நுண்ம உரக்கூட மையத்தில் 5 பணியாளர்களைக் கொண்டு உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1149நாள் 26.02.2020ன் படி, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 28.02.2021 வரை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நுண்ம உரக்கூட பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி உரம் தாயாரிக்கும் பணிகள் நடைபெற்றதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண். 1352 நாள்.11.02.2021–இன்படி, 01.03.2021 முதல் 28.02.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 5 பணியாளர்களை பணி அமர்த்திட Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1562, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை இரண்டு மாத காலங்களுக்கு பணி அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.61 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.07.2022ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் ஜீவா நகர் நுண்ம உரக்கூட மையத்தில் 5 பணியாளர்களைக் கொண்டு உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1155 நாள் 26.02.2020ன் படி, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 28.02.2021 வரை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நுண்ம உரக்கூட பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி உரம் தாயாரிக்கும் பணிகள் நடைபெற்றதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1353 நாள்.11.02.2021–இன்படி, 01.03.2021 முதல் 28.02.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 5 பணியாளர்களை பணி அமர்த்திட Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1563, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை இரண்டு மாத காலங்களுக்கு பணி அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.61 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.07.2022ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>எனவே, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு, உழவர் சந்தை, வாரச்சந்தை மற்றும் ஜீவாநகர் ஆகிய இடங்களில் உள்ள நுண்ம உரக்கூட மையங்களில் தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 15 பணியாளர்களைக் கொண்டு, பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை மேலும் |

| | |
|---|---|
| | மூன்று மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 15 பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் நுண்ம உரக்கூடங்களின் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட செலவினங்களை குப்பை வரி (SUC) யிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>தீர்மானம் எண்.137, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>** |
| பொருள்.16 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 25 வார்டு பகுதிகளில் Exernet, Madurai என்ற நிறுவனம் 185 துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு 01.03.2019 முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவந்ததால், மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையில், மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வந்ததால், மேலும், மேற்கண்ட நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனையின்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் முக்கியத்துவம் கருதியும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1349 நாள்.11.02.2021–இல், தற்போது துப்புரவு பணி மேற்கொண்டு வரும் Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் 28.02.2022 அன்றுடன் முடிவடைதால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வருவதால், Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு 01.03.2022 முதல் 30.04.2022 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1559, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை அதே ஊதிய விகித்தில் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 30.04.2022வுடன் முடிவடைந்ததால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட நிறுவனம் எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவுபணிகள் மேற்கொண்டு வருவதால் Exernet, Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் இந்நகர்மன்ற தீர்மான எண்.55 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br>தற்சமயம், மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் 31.07.2022 அன்றுடன் முடிவடைவதால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேலும் 01.08.2022 முதல் 31.10.2022 வரை மூன்று மாத காலங்களுக்கு Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.08.2022 முதல் 31.10.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிடவும் அதற்கான தொகை SUC மற்றும் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>தீர்மானம் எண்.138, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>** |

| | |
|---|---|
| பொருள்.17 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை நகர்மன்ற தீர்மான எண்.1047 நாள் 31.08.2019ன் படி, Exsernet, Madurai என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களை கொண்டு 01.12.2019 முதல் 31.10.2020 வரை பணிகள் மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து, ஓட்டுநர் பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி பொதுசுகாதார வாகனங்களை இயக்கி உள்ளதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1275 நாள்.28.10.2020–இன்படி, 01.11.2020 முதல் 31.10.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பொதுசுகாதார வாகனங்களை இயக்கிட Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்றத் தீர்மானம் 1481 நாள் 29.10.2021ன்படி அதே ஊதிய விகிதத்தில் மூன்று மாதங்களுக்கு 01.11.2021 முதல் 31.01.2022 வரை 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1550, நாள்.25.01.2022ன்படி, அதே ஊதிய விகிதத்தில் 01.02.2022 முதல் 30.04.2022 வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.57 நாள்.31.05.2022ன் படி அதே ஊதிய விகிதத்தில் 01.05.2022 முதல் 31.07.2022 வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.07.2022ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21787/2021/இஏ2 நாள் 02.10.2021இல் 13 ஓட்டுநர்களைக் கொண்டு பணிகள் செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1488, நாள் 29.10.2021இல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>Exsernet, Madurai என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களைக் கொண்டு பொது சுகாதார வாகனங்களை இயக்கும் பணிகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி மேற்கொண்டு வருவதாலும், பொதுசுகாதார அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை மூன்று மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்ய நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.08.2022 31.10.2022 வரை மூன்று மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண். 139, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.18 | அரசாணை நிலை எண்:166,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்:23.11.2016 நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும்,பள்ளி வளாகத்தை சுத்தமாக பராமரிப்பதற்கும், ஒரு பள்ளியில் மூன்று துப்புரவு பணியாளர்கள் வீதம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து வெளிகொணர்வு முறை (தனியார் மயம்) மூலம் பணிகள் மேற்கொள்ளவும்,அதற்காக ஆகும் செலவீனத்தை பள்ளிகள் மூலம் நகராட்சிக்கு செலுத்தப்படும் கல்வி வரியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.<br>அதன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 7 நகராட்சி துவக்கப்பள்ளிகளிகளும், 1 நகராட்சி நடுநிலைப்பள்ளி, 1 நகராட்சி உயர்நிலைப்பள்ளியும், 1 அரசு ஆதி திராவிடர் உயர்நிலைப்பள்ளியும், 1 அரசு மாணவியர் மேல்நிலைப்பள்ளியும், 1 அரசு இருபாலர் மேல்நிலைப்பள்ளியும் ஆக மொத்தம் 13 பள்ளிகள் உள்ளது.மேற்கன்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பள்ளிக்கு 3 துப்புரவு பணியாளர்கள் வீதம் 13 பள்ளிகளுக்கு மொத்தமாக 39 துப்புரவு பணியாளர்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட 2022-23 ம் வருட தினக்கூலி ஊதியத்தின் படி துப்புரவு பணியாளருக்கு ரூ.479/- அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு உத்தேசமாக ரூ.57 இலட்சத்திற்கு மேல் செலவீனத்தில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள |

| | |
|---|---|
| | வேண்டியுள்ளது.மேற்கண்ட செலவீனத்தை கல்வி நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சியில் கல்வி நிதிவரவு வருடத்துக்கு சுமார் ரூ.10 இலட்சம் மட்டுமே உள்ளதாலும்,நகராட்சியின் நிதி பற்றாமையை கருத்தில் கொண்டும், பள்ளிகளின் வகுப்பறைகள்,வளாகம்,கழிப்பறைகள்,மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றை நேரில் சென்று ஆய்வு செய்த வகையிலும் கீழ்க்காணுமாறு பணியாளர்கள் நியமித்தல் போதுமானதாக உள்ளது. |

| வ.எண் | குறிப்பு | ஆண் பணியாளர்கள் | பெண் பணியாளர்கள் | மொத்த பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 7 நகராட்சி துவக்கபள்ளிகளுக்கு (7*1=7) | 0 | 7 | 7 |
| 2 | 1 நகராட்சி நடுநிலைப்பள்ளிகளுக்கு (2*1=2) | 0 | 1 | 1 |
| 3 | 1 நகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு (1*2=2) | 1 | 1 | 2 |
| 4 | 1அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளிகளுக்கு (1*1=1) | 0 | 1 | 1 |
| 5 | 3 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு (3*2) | 3 | 3 | 6 |
| | **மொத்தம்** | **4** | **13** | **17** |

மேற்கண்ட பணியாளர்கள் 16 நபர்களை கொண்டு தனியார்மயம் மூலம் பணி மேற்கொள்ள உத்தேச செலவீனம் கீழ்காணுமாறு கணக்கிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய நிர்ணய உத்தரவு எண்:pdl.A3/614/2022 நாள்:25.06.2022 ன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ஊதியம் ரூ.479/- நிர்ணயக்கப்பட்டுள்ளது.அதன்படி,

| வ.எண் | குறிப்பு | தொகை |
|---|---|---|
| 1 | 17 நபர்கள் *ரூ.479*250 வேலைநாட்கள் | ரூ.20,35,750/- |
| 2 | EPF வருங்கால வைப்பு நிதி(13.61%) | ரூ. 2,77,066/- |
| 3 | தொழிலாளர் ஈட்டுறுதி தொகை ESI (4.75%) | ரூ. 96,698/- |
| 4 | நிர்வாக செலவீனம் 5% | ரூ. 1,01,788/- |
| | **மொத்தம்** | ரூ.25,11,302 |

மேற்கண்டவாறு ரூ.26 இலட்சத்தில் உத்தேச செலவீனத்தில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோர நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவீனத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.140, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

| | |
|---|---|
| பொருள்.19 | பரமக்குடி நகராட்சியில் NULM-SUSV-2022-23-ன் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு அவர்களுக்கு உரிய ID Card மற்றும் Street Vending சான்றிதழ்கள் டிஜிட்டல் முறையில் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து 04.07.2022 அன்று முதன்முதலாக மிண்ணனு வாயிலாக ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| | | |
|---|---|---|
| 1 | M/s Good Hope Foundation<br>No.50, 8th Street, Jawahar Nagar, | நபர் ஒன்றுக்கு<br>ரூ.600/- |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Thirumangalam. Madurai-625706.</td><td></td></tr>
<tr><td>2</td><td>M/s. Ramasamy Educational and Development Trust (READ)<br>Kanakka Pilllaiyur, Papakkapatti, Krishnarayapuram, Karur, TamilNadu -</td><td>நபர் ஒன்றுக்கு<br>ரூ.650/-</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் நபர் ஒன்றுக்கு ரூ.600 விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s Good Hope Foundation, மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். மன்றத்தின அனுமதிக்கு<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணி மாண்புமிகு நகராட்சிநிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட பணி என்பதாலும் மேற்கண்ட பணியை உடனடியாக செய்துமுடிக்க வேண்டியிருந்ததாலும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண்.141, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
<tr>
<td>பொருள்.20</td>
<td>பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திருமதி.செல்வராணி பிரேமானாந்த் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P(MD)No.11824/2022ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். பரமக்குடி சாகுல்ஹமீது தெருவில் பழமையான கட்டிடத்தை இடிக்கும்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.கண்ணன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.அவசர அவசியம் கருதி மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.<br>
தீர்மானம் எண். 142, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
<tr>
<td>பொருள்.21</td>
<td>பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு.இருளாண்டி த/பெ.சோமசுந்தரம் என்பவர் வழக்கு எண். OS எண். 68/2022 I.A எண். 177/2022, சார்பு நீதிமன்றம் பரமக்குடியில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இட உரிமை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.இளங்கோவன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும் மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.அவசர அவசியம் கருதி மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.<br>
தீர்மானம் எண். 143, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
<tr>
<td>பொருள்.22</td>
<td>பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு.H.S.முகைதீன் என்பவர் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பரமக்குடியில் O.S No.47/2022 மற்றும் IA No.42/2022 & IA No.43/2022 என நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். இட உரிமை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.கண்ணன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண். 144, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
<tr>
<td>பொருள்.23</td>
<td>பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகளை குத்தகை விடப்பட்டதன் பேரில் 30.06.2022ம் தேதி முடிய மூன்றாண்டு முடிவடைந்துள்ளது. மேலும் குத்தகைதாரர்களுக்கு தற்போது செலுத்தியுள்ள வாடகையுடன் 15% கூடுதலாக உயர்த்தி நிபந்தைகளுக்கு உட்படுத்தி 01.07.2022 முதல் 30.08.2025 முடிய மூன்றாண்டுகள் கடையினை நடத்தி கொள்ள உத்திரவு வழங்கலாம். புதுப்பித்தல் கட்டணம் நகராட்சி அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்கள். குத்தகைதாரர்களிடம் வாடகையுடன் 15% உயர்த்தி நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றம் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u>
</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1634/2022/சி2<br>**தீர்மானம் எண்.145, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.24 | இந்நகராட்சியில் 01.04.2022ம் ஆண்டு முதல் சொத்துவரி பொது சீராய்வு சம்மந்தமாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.40032/சுஐ/2012 நாள் 19.07.2022ன்படி பொது சீராய்வு நோட்டீஸ் அஞ்சல் அலுவலகத்தின் மூலம் அனுப்புவதற்குக கடிதம் வரப்பட்டுள்ளது. அதன்படி முதன்மை தபால் அஞ்சல் அலுவலர் சென்னை அவர்களின் D.D.No.BD/5-241/2022 நாள்.11.07.2022ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு நோட்டிஸ் அனுப்புவதற்கு குறைந்தது ரூ.15/– வீதம் செலவு ஆகும். எனவே இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சொத்துவரி நோட்டீஸ் அனுப்பி வைக்க உத்தேச செலவினம் ரூ.500000/– (ஐந்து லட்சம் மட்டும்) அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட செலவினம் பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.146, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
